**காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்**

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 29ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் தேதி, வியாழக்கிழமை**

குறள்:402

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

குறள் விளக்கம்:

கல்வி அறிவில்லாதவன் கற்றோர் அவையில் பேச விரும்புதல், இரண்டு தனங்களும் இல்லாத பெண், பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

**பொன்மொழி**

காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செல்கிறது. காற்றுடன் அல்ல

**பழமொழி**

*Bend the twig, bend the tree*

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பொதுஅறிவு வினா விடை**

- மதுரையில் உள்ள பல்கலைக்கழகம் – மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- திருநெல்வேலியில் உள்ள பல்கலைக்கழகம் – மனோன்மணீயம் சுந்தரானார் பல்கலைக்கழகம்

**இரண்டொழுக்க உறுதிமொழி**

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

Abbreviations

*D.D. - Demand Draft* - கேட்பு வரைவோலை

*DA - Dearness Allowance* - அகவிலைப்படி

## இன்று நினைவு கூறப்படும் தினம்

**உலக சிறுநீரக தினம்**

## இன்றைய செய்திகள்

- தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏப்ரல் 1-ந்தேதி தொடங்குகிறது. அப்போது ஒவ்வொருவரும் 31 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.
- கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க வருகிற 29-ந்தேதி முதல் தொடங்க உள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு தடை விதிக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது
- தனது அரசியல் நிலை குறித்த முக்கிய அறிவிப்பை நடிகர் ரஜினிகாந்த் இன்று தெரிவிக்கிறார்.
- டெல்லி வன்முறையில் தொடர்புடையவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது என்று உள்துறை மந்திரி அமித்ஷா தெரிவித்தார்.
- இனிமேல் புதிதாக ஹைட்ரோ கார்பன் திட்டத்தை டெல்டா பகுதியில் தொடங்க முடியாது என்றும், ஏற்கனவே உள்ள திட்டத்தை தடை செய்தால் கோர்ட்டுக்கு போவார்கள் என்றும் சட்டசபையில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்துள்ளார்.
- பொதுமக்களும் ஒத்துழைத்தால்தான் பிளாஸ்டிக் ஒழிப்பை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்று சட்டசபையில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.
- சென்னையில் போலி கால்சென்டர் நடத்தி ஆயிரம் பேரிடம் கோடி கணக்கில் பணமோசடி செய்ததாக 4 பேர் கைதாகி உள்ளனர்.
- தமிழகத்தில் உள்ள வணிக நிறுவனங்களில் பெயர் பலகை தமிழில் இருக்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.
- இந்தியா- தென்ஆப்பிரிக்கா அணிகள் மோதும் முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தர்மசாலாவில் இன்று நடக்கிறது.

sowndeeswarischool.com